தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.19/மா/2022**

**நாள். 09.05.2022**

| | | |
|---|---|---|
| திரு. ஞா.சாம்ரோபஸ்ட்<br>தூத்துக்குடி | – | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்,<br>தூத்துக்குடி மாநகராட்சி | – | எதிர்மனுதாரர் |

தூத்துக்குடி மாவட்டம், புதியம்புத்தூர், மேலமடம், மெயின் ரோடு, கதவு எண்.12/149–ல் வசிக்கும் திரு.ஞா.சாம்ரோபஸ்ட் என்பவரின் 10.01.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.02.2022 அன்று பெறப்பட்டு 19/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், புதியம்புத்தூர், மேலமடம், மெயின் ரோடு, கதவு எண்.12/149–ல் வசிக்கும் திரு.ஞா.சாம்ரோபஸ்ட் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 10.01.2022 நாளிட்ட தனது மனுவில், கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

"தூத்துக்குடி மாநகராட்சியில் 8 இளநிலை உதவியாளர் cum தட்டச்சர் காலிப்பணியிடங்களுக்கு 07.06.2015 மற்றும் 08.06.2015 ஆகிய தேதிகளில் தினமணி மற்றும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் வழி அறிவிக்கை வெளியிடப்பட்டு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன; மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்தும் தகுதியான விண்ணப்பதாரர்கள் விவரங்கள் பெறப்பட்டுள்ளது. ஆனால் இந்நேரடி நியமனம் நேர்மையான முறையில் நடைபெறாமல், ஏற்கனவே பணி வழங்கப்பட வேண்டிய நபர்கள் தீர்மானிக்கப்பட்டு, நேரடி நியமனம் தொடர்பான விதிமுறைகளை கடைப்பிடிப்பது போன்ற தோற்றத்தை உருவாக்கும் விதமாகவே மாநகராட்சி நிர்வாகத்தின் இதர செயல்பாடுகள் இந்நேரடி நியமனத்தில் அமைந்துள்ளன.

கீழே உள்ள விவரப்படி இந்நேரடி நியமனம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 நபர்களில் 7 நபர்கள் எனது அறிவிற்கு எட்டிய வரை மாநகராட்சி நிர்வாகத்தில் செல்வாக்கு உடையவர்களின் வாரிசுகள், மற்றும் அம்மாநகராட்சி பணியாளர்களின் வாரிசுகள், மனைவி மற்றும் அவர்களது நெருங்கிய ரத்த

சொந்தங்கள், எனவே நியமனங்கள் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொண்டு தவறிழைத்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

| வ. எண். | தேர்ந்தெடுக்கப்பட்ட பணியாளரின் பெயர் | மாநகராட்சி நிர்வாகத்துடன் உள்ள தொடர்பு |
|---|---|---|
| 1. | வ.ஆறுமுகபிரபு, த/பெ.வாலசுப்பிரமணியன் | துணை இயக்குநர் மாநகராட்சி உடனிகழ் பிரிவு, தூத்துக்குடி அவர்களின் சொந்த மகன். |
| 2. | பி.சுதா, த/பெ. பிரகாசம் | தூத்துக்குடி மாநகராட்சியின் கணக்காளராக செயல்பட்டு வரும் திரு.முத்துஎன்றபணியாளரின் மனைவி |
| 3. | ஜே.சைனி பிரியங்கா த/பெ. ஜேம்ஸ் தென்சிங் | தூத்துக்குடி மாநகராட்சியின் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ஜேம்ஸ் தென்சிங் என்பவரின் சொந்த மகள் |
| 4. | இ.கோமதி அருணா, த/பெ.இசக்கியப்பன் | தூத்துக்குடி மாநகராட்சியின் வரி வசூலராக பணியாற்றி வரும் திரு.ரவிக்குமார் என்பவரின் சகோதரர் மகள் |
| 5. | மூ.மீரா த/பெ. மூசா | தூத்துக்குடி மாநகராட்சியின் மேயர் அலுவலத்தில் தற்காலிக ஊதியத்தில் பணியாற்றி வந்த ஊழியர் |
| 6. | இ.மரிய ஆரோக்கிய லிபியா த/பெ.இருதயம் | தூத்துக்குடி மாநகராட்சியின் 4–வது குடிநீர் குழாய் திட்டப்பணியில் தற்காலிக ஊதியத்தில் பணியாற்றி வந்த ஊழியர் |
| 7. | கொ.சரண்யா த/பெ.கொண்டு செட்டி | மாநகராட்சி அதிகாரிகளுடன் பத்திரிகை ரீதியாக அதிக தொடர்பில் இருந்த 'தி இந்து' நாளிதழின் போட்டோகிராபர் மனைவி |

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2022 நாளிட்ட கடிதம் மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தனது 01.03.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்:

- தூத்துக்குடி மாநகராட்சியில் 2015ம் ஆண்டு அரசாணை (நிலை) எண்.44 பணியாளர்(ம) வேலைவாய்ப்புத்துறை, நாள். 11.03.2015ல் தெரிவித்துள்ளபடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்தும் பதிவு செய்தோரின் இன சுழற்சி முறையில் பட்டியல் பெறப்பட்டது.

தினசரி செய்தித்தாளிலும் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதனை மனுதாரர் தனது புகார் மனுவில் ஒப்புக்கொண்டுள்ளார். ஆகவே விண்ணப்பங்கள் பெறப்பட்டதில் எந்தவித ஒளிவு மறைவோ முறைகேடோ நடக்கவில்லை.

- பெறப்பட்ட விண்ணப்பங்களில் விண்ணப்பதாரர்களின் வயது, கல்வித்தகுதி, தட்டச்சு தகுதி மற்றும் இன சுழற்சி அடிப்படையில் தகுதியான விண்ணப்பங்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மட்டும் நேர்காணல் குறித்த கடிதம் அனுப்பப்பட்டது. பெறப்பட்ட விண்ணப்பங்கள், தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணங்கள் இவை அனைத்தும் முறையாக கோப்பிடப்பட்டு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- ஆணையர் அவர்களின் உத்தரவின்படி நேர்காணல் நடத்தப்பட்டு இன சுழற்சி முறையில் 13 இனங்களில் 8 இனங்களுக்கான நபர்கள் மட்டும் தகுதி உடையவர்களாக தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட 8 நபர்களுமே அனுமதிக்கப்பட்ட காலியிடங்களை நிரப்பிடுவதற்குரிய விதிமுறைகளின்படி நேர்முகத்தேர்வு நடத்தி மாநகராட்சி ஆணையரின் கடிதத்தில் தெரிவித்தபடி மாநகராட்சியின் அதிகார வரையறைக்குள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அனைத்து விதிமுறைகளும் பின்பற்றப்பட்டு தகுதியானவர்களை சான்றிதழ்கள் சரிபார்த்து நேர்காணல் நடத்திய பின்னரே இறுதி செய்யப்பட்டுள்ளனர்.

- நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் வயது, தட்டச்சு தகுதி, இனசுழற்சி இவற்றில் விதிகளுக்கு அப்பாற்பட்டிருந்தால் மட்டுமே நிராகரிக்கப்பட்டனர்.

- மனுவில் இணைக்கப்பட்ட பட்டியலில் வரிசை எண் 4ல் குறிப்பிடப்பட்ட நபர் இவ்வலுவலகத்தில் பணி செய்யவில்லை என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் பட்டியலின்வரிசை எண்.6ல் குறிப்பிடப்பட்ட பணியாளர் மாநகராட்சியில் ஏற்கனவே தற்காலிக ஊதியத்தில் பணியாற்றவில்லை என்ற விவரமும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

- மனுதாரர் திரு. ஞா.சாம்ரோபஸ்ட் என்பவர் தன் சொந்த காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இம்மனுவை அனுப்பியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஏற்கனவே இந்நியமனம் குறித்த தகவல்களை தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலமாகவும் மேல்முறையீடு மூலமாகவும் திரும்ப திரும்ப இதே தகவல்களை வழங்கக் கோரி கேட்டுக்கொண்டுள்ளார்.

- மனுதாரர் திரு.சாம்ரோபஸ்ட் என்பவர் ஏற்கனவே தூத்துக்குடி மாநகராட்சியில் உதவி ஆய்வாளராக தூத்துக்குடி மாநகராட்சி உடனிகழ் தணிக்கைப்பிரிவில் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் தனது தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விகளை மீண்டும் மீண்டும் கேட்டு தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக அலுவலகத்தில் பணிசெய்யும் பணியாளர்களின் நேரத்தை வீணடிக்கிறார். முறைகேடு நடந்துள்ளதாக மனுதாரர் தெரிவித்துள்ள இப்புகாரினால் மாநகராட்சிக்கும் உயர் அதிகாரிகளுக்கும் வீணான களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இப்புகாரினை அளித்துள்ளார்.

மேலும் 2015ன் இறுதியில் தொடங்கப்பட்ட இந்நியமனப்பணி பல்வேறு நிர்வாகக் காரணங்களால் தடைபட்டு 2017 மார்ச்சு மாதத்தில் நிறைவுற்றது. இதுகுறித்து நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தில் ஏற்கனவே நடைமுறையிலுள்ள விதிகளின்படி 8 இ.நி.உ. (ம) தட்டச்சர் பணியிடங்களை நிரப்பிக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதற்கு நகராட்சி நிர்வாக ஆணையிடத்திடமிருந்து பிரத்தியேக ஆணை ஏதும் தேவையில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது" என தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் மற்றும் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு 26.04.2022 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 07.04.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் திரு. ஞா. சாம்ரோபஸ்ட் 26.04.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"தூத்துக்குடி மாநகராட்சியில் 8 இளநிலை உதவியாளர்/தட்டச்சர் காலிப்பணியிடங்களை நிரப்பும்போது முறையாக பணிநியமனம் செய்யப்படாமல் செல்வாக்கு உள்ள நபர்களை பணியமர்த்தியுள்ளனர். மேற்கண்ட 8 நியமனங்களில் 7 பேர் மாநகராட்சியில் செல்வாக்குள்ள வாரிசுதாரர்கள் ஆவர். எனவே, மேற்கண்ட பணிநியமனம் குறித்து விசாரித்திடவும், முறைகேடாக பணிநியமனம் மேற்கொண்ட சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றும் மேலும் 10.02.2022 நாளிட்ட மனுவினையே எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன் " என தெரிவித்துள்ளார்.

5) 26.04.2022 அன்றைய நேரடி விசாரணையில் தூத்துக்குடி மாநகராட்சியின் நிர்வாக அலுவலர் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"தூத்துக்குடி மாநகராட்சியில் 6 இளநிலை உதவியாளர் மற்றும் 2 வரி தண்டலர் பணியிடங்களை நிரப்பும்பொருட்டு தினசரி பத்திரிக்கையில் 7.6.2015 மற்றும் 8.6.2015 அன்று விளம்பரம் செய்யப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மேலும், வேலைவாய்ப்புத்துறையிலிருந்து 30.06.2015 அன்று இனவாரியான பெயர் பட்டியல் பெறப்பட்டது. மேலும் நேர்காணலுக்கு வருகை தந்தவர்களின் வருகையை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேலும் மேற்கண்ட காலிப்பணியிடங்களை நிரப்பும்போது இனசுழற்சி முறை பின்பற்றப்பட்டது என்றும், எனவே மேற்கண்ட பணி நியமனத்தில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை என்றும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக தேதிவாரியாக நடைபெற்ற நிகழ்வுகளை பட்டியலிட்டு இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். இதனையும் எனது மேல்வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட 8 பணியிடங்களை நிரப்பும்போது கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் தொடர்பான நகல்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாநகராட்சியில் 2017ல் பணி நியமனம் செய்த 8 இளநிலை உதவியாளர்கள் (ம) தட்டச்சர்களின் நியமனம் பற்றிய விவரங்கள்:

அரசாணை (நிலை எண்) எண்.201 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 23.12.2013ன்படி 91 இடங்களை நிரப்பிட அரசு அனுமதி அளித்துள்ளது.

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திடமிருந்து இன வாரியாக பெயர்ப்பட்டியல் பெறப்பட்டது.

தினமணி நாளிதழில் 07.06.2015 மற்றும் 08.06.2015 அன்று இனவாரியாக வேலைவாய்ப்பு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது.

பெறப்பட்ட விண்ணப்பங்களில் தகுதியுள்ள 50 நபர்கள் மட்டும் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டனர். நேர்காணலுக்கு வந்த நபர்களிடம் வருகைப்பதிவேடு பராமரிக்கப்பட்டது. அனைவரிடமும் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

பின்னர் சான்றிதழ் சரிபார்ப்பின் பொழுது வயது, இனம், கல்வித்தகுதி, தட்டச்சு தேர்ச்சி, பணி அனுபவம் இவைகளைப் பொறுத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது. 8 நபர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதற்கான பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பெயர்ப்பட்டியலில் உள்ள நபர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டதா என்று வேலை வாய்ப்பு அலுவலகத்திடமிருந்து கடிதம் பெறப்பட்டது. வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்பட்ட பெயர்ப்பட்டியல்களுக்கு 20.11.2015 லும் செய்தித்தாள் விளம்பரம் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு 01.07.2015லும் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு 13 இனங்களில் 8 நபர்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு நியமனக்குழுவிற்கு கூட்டப்பொருள் வைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு 06.04.2016 கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமனக்குழு கூட்டப்பொருள் சமர்ப்பிக்கப்பட்டு 8 நபர்களுக்கும் 21.06.2016 அன்று முறையாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையருக்கு 8 நபர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கிட அனுமதி கேட்டு 24.02.2017 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்படி கடிதத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து, கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 106(2) (c ) ல் வகுப்பு III சார்ந்த பணியிடங்கள் நியமனக்குழுவால் நடைபெற வேணடும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி நிர்வாக ஆணையத்தின் பிரத்யேக ஆணை ஏதும் தேவையில்லை என்றும் மாநகராட்சி சட்ட விதிமுறைகளின்படி ஸ்தல மட்டத்தில் முடிவு செய்யலாம் என்றும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக 23.03.2017 நாளில் ஆணையர் அவர்களின் செயல்முறையின்படி மேற்படி தேர்வு செய்யப்பட்ட 8 நபர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, எழுத்துப்பூர்வ வாக்குமூலம், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை, தூத்துக்குடி மாநகராட்சி நிர்வாக அலுவலர் வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த தேதிவாரியான நிகழ்வுகளின் விவரங்கள் ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் திரு. ஞா. சாம்ரோபஸ்ட் தூத்துக்குடி மாநகராட்சியில் 8 இளநிலை உதவியாளர்/தட்டச்சர் காலிப்பணியிடங்களை நிரப்பும் போது முறையாக பணி நியமனம்

செய்யப்படாமல் செல்வாக்கு உள்ள நபர்களை பணியமர்த்தியுள்ளனர் என புகார் தெரிவித்துள்ளார்.

- ❖ இந்நேர்வில் தூத்துக்குடி மாநகராட்சிக்கு அரசாணை (நிலை) எண்.201 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 23.12.2013ன்படி 91 இடங்களை நிரப்பிட அரசு அனுமதி அளித்துள்ளதை அறியமுடிகிறது.
- ❖ மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திடமிருந்து இன வாரியாக பெயர்ப்பட்டியல் பெறப்பட்டதையும் அறிய முடிகிறது.
- ❖ தினமணி நாளிதழில் 07.06.2015 மற்றும் 08.06.2015 அன்று இனவாரியாக வேலைவாய்ப்பு விளம்பரம் பிரசுரிக்கப்பபட்டுள்ளது.
- ❖ பெறப்பட்ட விண்ணப்பங்களில் தகுதியுள்ள 50 நபர்கள் மட்டும் நேர்காணலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். நேர்காணலுக்கு வந்த நபர்களிடம் வருகைப்பதிவேடு பராமரிக்கப்பட்டுள்ளது. அனைவரிடமும் கையொப்பமும் பெறப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது.
- ❖ பின்னர் சான்றிதழ் சரிபார்ப்பின் பொழுது வயது, இனம், கல்வித்தகுதி, தட்டச்சு தேர்ச்சி, பணி அனுபவம் இவைகளைப் பொறுத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது. இதில் 8 நபர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதற்கான பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- ❖ வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பெயர்ப்பட்டியலில் உள்ள நபர்களுக்கு நேர்காணல் நடத்தப்பட்டதா என்று வேலை வாய்ப்பு அலுவலகத்திடமிருந்து கடிதம் பெறப்பட்டது. வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெறப்பட்ட பெயர்ப்பட்டியல்களுக்கு 20.11.2025லும் செய்தித்தாள் விளம்பரம் மூலம் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு 01.07.2015லும் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு 13 இனங்களில் 8 நபர்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு நியமனக்குழுவிற்கு கூட்டப்பொருள் வைக்கப்பட்டுள்ளது என்ற விவரம் வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு 06.04.2016 கடிதம் மூலம் மாநகராட்சி தெரிவித்துள்ளது.
- ❖ நியமனக்குழு கூட்டப்பொருள் சமர்ப்பிக்கப்பட்டு 8 நபர்களுக்கும் 21.06.2016 அன்று முறையாக அனுமதி பெறப்பட்டுள்ளது.
- ❖ நகராட்சி நிர்வாக ஆணையருக்கு 8 நபர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கிட அனுமதி கேட்டு 24.02.2017 அன்று கடிதம் அனுப்பப்பட்டது தெரிய வருகிறது.
- ❖ மேற்படி கடிதத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து, கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 106(2) (c) ல் வகுப்பு III சார்ந்த பணியிடங்கள் நியமனக்குழுவால் நடைபெற வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே நகராட்சி நிர்வாக ஆணையத்தின் பிரத்யேக ஆணை ஏதும் தேவையில்லை என்றும் மாநகராட்சி சட்ட விதிமுறைகளின்படி ஸ்தல மட்டத்தில் முடிவு செய்யலாம் என்றும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதையும் அறியமுடிகிறது.
- ❖ 23.03.2017 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறையின்படி மேற்படி தேர்வு செய்யப்பட்ட 8 நபர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

எனவே ஆணையர், தூத்துக்குடி மாநகராட்சி அவர்களின் அறிக்கை மற்றும் தூத்துக்குடி மாநகராட்சியின் நிர்வாக அலுவலர் வாக்குமூலம் மற்றும் அவர்கள் சமர்ப்பித்துள்ள விவரங்களிலிருந்து அம்மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிநியமனங்களில் எந்தவித முறைகேடும் நடைபெறவில்லை, உரிய விதிமுறைகளை பின்பற்றியே பணிநியமனம் நடைபெற்றுள்ளதால், ஆணையர், தூத்துக்குடி

மாநகராட்சி அவர்களின் அறிக்கையை ஏற்று முறையீட்டு மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துவைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2022 ஆம் ஆண்டு மே திங்கள் 09–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ஞா. சாம்ரோபஸ்ட்,
12/149, மெயின்ரோடு,
மேலமடம்,
புதியம்புத்தூர்.
தூத்துக்குடி – 628 402.

2) ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை -600 028.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்